

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (3.2.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, எம்.கே.பி. நகர், சென்ட்ரல் அவென்யூ சாலையில் ரூ.19.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய சமுதாய நலக்கூடத்தின் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா ராஜன், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி. சேகர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார். மண்டலக் குழுத்தலைவர் நேதாஜி உ.கணேசன். சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, ஆ.பாலசுப்ரமணியன், மண்டல அலுவலர் சரவண மூர்த்தி, மாமன்ற உறுப்பினர் திருடில்லிபாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.




பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளையொட்டி நேற்று (03.02.2025) சென்னை மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டார்.

## தமிழ்நாட்டில் 2,500 கோயில்களுக்கு குடமுழுக்கு:

# இராயப்பேட்டை சீனிவாசப் பெருமாள் கோயில் குடமுழுக்கு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, பிப்.4-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத்துறையின் 2,500-வது குடமுழுக்காக நேற்று (03.02.2025) சென்னை, இராயப்பேட்டை, சீனிவாச பெருமாள் திருக்கோயில் திருக்குட முழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்றார்.

இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு, இந்து சமய அறநிலையத்துறையில் 2,500வது குடமுழுக்காக இன்றைய தினம் இராயப்பேட்டை, சீனிவாச பெருமாள் திருக்கோயில் குடமுழுக்கு 14 ஆண்டுகளுக்கு பிறகு சிறப்பாக நடைபெற்றது.

நேற்றைய தினம் 68 குடமுழுக்குகளும், இன்றைய தினம் நடைபெறும் 27 குடமுழுக்குகளையும் சேர்த்து இதுவரை 2,504 குட முழுக்குகள் நடந்தேறி இருக்கிறது. இதில் 5 திருக்கோயில்கள் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதிருக்கோயிலாகும்.

இந்த அரசு பொறுப்பேற்றபின் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாக்க ரூ. 300 கோடி அரசு மானியத்தை வழங்கியுள்ளது. மேலும், உபயதாரர்கள் நிதி மற்றும் திருக்கோயில் நிதி ரூ.127 கோடி சேர்த்து மொத்தம் ரூ.427 கோடி செலவில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் 3,000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.7,139 கோடி மதிப்பிலான 7,431 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. மாநில வல்லுநர் குழுவால் 11,170திருக்கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் இந்து சமய அறநிலையத்துறையில் ரூ.5515.54 கோடி மதிப்பிலான 23,234 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் உபயதாரர்கள் மட்டும் ரூ.1,261 கோடி மதிப்பிலான 9,899 திருப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இராயப்பேட்டை, சீனிவாசபெருமாள்திருக்கோயிலுக்கு உபயதாரர்கள் நிதியில் ரூ.46 லட்சம் மதிப்பீட்டில் வெள்ளித்தேர் பணிகள் நிறைபெற்று விரைவில் ஒப்படைக்கப்பட உள்ளது.

இப்படி எங்கு பார்த்தாலும் திருக்கோயிலின் மணி ஓசைகள், தீபதூப ஆராதனைகள். திருப்பணிகள் என இறையன்பர்கள் மகிழ்ச்சியோடு இருக்கின்ற ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒரு கால பூஜைத் திட்டத் திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்ட வைப்பு நிதி ரூ.1 லட்சத்திலிருந்து, ரூ.2 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு இதுவரை 17,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. அதன் அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் ஊக்கத் தொகையாக ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது.

கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி ரூ.லட்சத்திலிருந்து, ரூ.2.50 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. தேனாம்பேட்டை, பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வரும் மே மாதத்திற்குள் குடமுழுக்கு நடத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

## மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில்

# ரூ.35 இலட்சம் மதிப்பில் புதிய பல்நோக்கு கட்டிடம்!

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை, பிப்.4-

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வார்டு-144, மதுரவாயல், பெருமாள் கோயில் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் (2022-2023) கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகரசென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வார்டு-144, மதுரவாயல், பெருமாள் கோயில் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் (2022-2023) கீழ் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று (03.02.2025) நடைபெற்றது.

இதில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு அக்கட்டிடத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மண்டலம்-11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே. ராஜன் எம்.சி., மாமன்ற உறுப்பினர் எம்.இ.ஸ்டாலின், மாவட்ட பிரதிநிதிகள் கே.ராஜ்குமார், எம்.ஆர்.சதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சென்னை தெற்கு மாவட்ட அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு



சென்னை தெற்கு மாவட்ட அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆலோ சனைக் கூட்டம் நாளை (5- 2- 2025 புதன்கிழமை) மாலை 4.00 மணியளவில் சைதை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் :** கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை
செயலாளர் - சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.





சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், அய்யப்பாக்கம், வானகரம் மற்றும் அடையாளம்பட்டு ஆகிய ஊராட்சிகளிலுக்குட்பட்ட பாக இளைஞரணி முகவர்களுக்கான கலந்தாய்வு கூட்டம் அய்யப்பாக்கம் வள்ளுவர் வாசுகி சமூக நலக்கூடத்தில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா. வினோத் தலைமையில் ஒன்றிய துணை அமைப்பாளர்கள் கே.கே.செந்தில்குமார், எஸ்.பி. முரளிகிருஷ்ணன்,எம். சபரிராஜா,எஸ். ஜனார்தனம்,பி.மனிஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், 151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச.சங்கர் கணேஷ் எம்.சி.ஆலோசனை வழங்கினார். அதுசமயம் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பாக இளைஞரணி முகவர்கள் கலந்து கொண்டனர்.

## கல்விக் கடன் திட்டத்தை – முதலிடத்தில் உள்ள

# கல்வி நிறுவனங்களுக்கு வெளியே உள்ள மாணவர்களுக்கு விரிவுபடுத்தப்படுமா?

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப்.4-

வித்யாலட்சுமி கல்விக்கடன் திட்டத்தை முதலிடத்தில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு வெளியே உள்ள மாணவர்களுக்கு விரிவுபடுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ளதா? இந்தத் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கான CIBIL மதிப்பெண் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தளர்த்த ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா என மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்பி கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதுபற்றிய விபரம் வருமாறு :-

வித்யாலட்சுமி கல்விக்கடன் திட்டத்தை முதலிடத்தில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு வெளியே உள்ள மாணவர்களுக்கு விரிவுபடுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ள சீரிய நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் யாவை?

இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்படும் என எதிர்பார்க்கப்படும் காலம்> மற்றும் தற்போது நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மாணவர்களுக்கு ஏதேனும் இடைக்கால ஆதரவு உள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை?

ஏழை மாணவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கான CIBIL மதிப்பெண் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தளர்த்த ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை?



இந்தத் திட்டத்தின் நிலையான உறுதித்தன்மையை ஒன்றிய அரசு உறுதி செய்யும் விதம் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது பட்ஜெட் ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கு அல்லது அதற்கு ஈடாக உயர்த்தி சரி செய்வதற்கு திட்டம் ஏதேனும் உள்ளதா? அப்படியானால்> அதன் விவரங்கள்? பட்டப்படிப்புக்குப் பிறகு நிதி சவால்களை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு கடன் திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளை எளிதாக்குவதற்கு அல்லது கடன் தள்ளுபடி வழங்குவதற்கு ஏதேனும் ஏற்பாடுகள் உள்ளதா? அப்படியானால்> அதன் விவரங்கள் யாவை? என்று கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் டாக்டர் சுகந்தா மஜூம்தர் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் :-

ஒன்றிய அரசின் பி.எம். வித்யாலட்சுமி ஒரு புதிய துறைத் திட்டம். இது நவம்பர் 6, 2024 அன்று தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் உயர் தர உயர்கல்வி நிறுவனங்களில் (QHEIS) தகுதி அடிப்படையிலான சேர்க்கை பெறும் மாணவர்களுக்கு பிணையம் இல்லாத மற்றும் உத்தரவாதம் இல்லாத கல்விக் கடன் வழங்கப்படுகிறது.

இந்த உயர்கல்வி நிறுவனங்கள் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன :-

ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட NIRF இன் சமீபத்திய பட்டியலில் ஒட்டுமொத்த / வகை சார்ந்த தரவரிசையில் முதல் தர வரிசைப்படுத்தப்பட்ட 100 உயர்கல்வி நிறுவனங்கள்; ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட NIRF இன் சமீபத்திய பட்டியலில் மாநில / யூனியன் பிரதேச அரசுகளின் நிர்வாகத்தின் கீழ் முதல் 200 தர வரிசைப்படுத்தப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள்; இதோடு இந்திய ஒன்றிய அரசின் நிர்வாகத்தின் கீழ் மீதமுள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்கள் 2024-25 கல்வியாண்டிற்கான QHEI-களின் பட்டியலைத் தயாரிப்பதற்கு NIRF 2024 தரவரிசை பரிசீலிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்காக 860 QHEI-கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். PM வித்யாலட்சுமி திட்டத்தின் கீழ் கல்விக் கடன்களை அனுமதிப்பதற்கு மாணவர்களின் CIBIL மதிப்பெண் ஒரு அளவுகோல் அல்ல.

மேலும் 8 லட்சம் வரை குடும்ப ஆண்டு வருமானம் உள்ள மாணவர்களுக்கு இந்தத் திட்டம் 10 லட்சம் வரையிலான கடன்களுக்கு 3% வட்டி மானியத்தை வழங்குகிறது. வேறு எந்த உதவித்தொகை அல்லது கல்விக் கடனில் வட்டி மானியம் பெறாத ஒரு லட்சம் புதிய மாணவர்களுக்கு இந்த வட்டி மானியம் கிடைக்கும். இந்த வட்டி மானியத்தின் காலம் தற்காலிக காலம் அதாவது பாடநெறி காலம் மற்றும் ஒரு வருடம் ஆகும். 2024-25 முதல் 2030-2031 வரையிலான வட்டி மானியத்தின் மொத்த செலவு 3600 கோடி.

பிரதான் மந்திரி உச்சதர் சிக்ஷா புரோட்சஹான் கடன் உத்தரவாத நிதியின் கீழ் ஒன்றிய அரசின் கல்விக் கடன்களுக்கான திட்டம் (PM-USP CGFSEL), 7.50 லட்சம் வரை அனுமதிக்கப்பட்ட கல்விக் கடன்களுக்கு கடன் உத்தரவாதம் வழங்கப்படுகிறது. நிலுவையில் உள்ள கடனில் உத்தரவாதக் காப்பீடு 75% வரை ஆகும்.

மேலும் இந்திய வங்கிகளின் மாதிரி கல்விக் கடன் திட்டத்தின் கீழ் கல்விக் கடனுக்கான திருப்பிச் செலுத்தும் காலம் தடைக்காலத்திற்குப் பிறகு 15 ஆண்டுகள் வரை ஆகும்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

## புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் – மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா

# மாபெரும் கோலப் போட்டி! தங்க நாணயங்கள் பரிசு!

### கா. தாமரைச்செல்வன் தலைமையில் – மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கினார்!

சென்னை, பிப் 4-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாபெரும் கோலம் போட்டி நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கோலப் போட்டி மாத்தூர் 19 வது வட்டம் முதல்பிரதான சாலை மற்றும் இரண்டாவது பிரதான சாலை இணைக்கும் சர்வ சக்தி மாரியம்மன் கோவில் தெருவில் நடைபெற்றது .

19 ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த கோலப் போட்டிக்கு கவுன்சிலர் க. காசிநாதன், மாவட்ட பிரதிநிதி வி. கார்த்திகேயன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி. ஜெயராஜ்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப பணி துணை அமைப்பாளர் சின்ன மாத்தூர் மணிகண்டன், துரை தசரதன், பி. துரைசாமி, எஸ். உதயகுமார், வட்ட கழக நிர்வாகிகள் துளசி, திருமலை, ஐ சி எஃப் விஜய குமார், சின்ன மாத்தூர் குகன், ஜி. ராஜேஷ் கண்ணன்,முகமது முஸ்தபா, சிவப்பிரகாசம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் ஒன்றிய அரசின் வேதனைகள் குறித்து நடைபெற்ற இந்த வண்ணமிகு கோல போட்டியில், சுமார் 80க்கும் மேற்பட்ட கோலங்கள் 300 பொதுமக்களால் வரையப்பட்டன.

திராவிட மாடல் அரசின் சாதனைகளான இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம், நான் முதல்வன், நம்மை காக்கும் 48, விடியல் பயணம், மகளிருக்கு ஆயிரம் ரூபாய் உதவித்தொகை, முதலமைச்சரின் காலை உணவு திட்டம், அதே போல ஒன்றிய அரசின் வேதனைகளான நீட் தேர்வு ரத்து செய்ய மறுத்தல், கேஸ் விலை உயர்வு, மற்றும் பொதுநல அக்கறையோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று போதை பொருள் பயன்படுத்தக் கூடாது என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கோலங்கள் வரையப்பட்டன.

கோலங்களின் நடுவர்களாக காவல்துறையைச் சேர்ந்த 3 பெண் காவலர்களும், மண்டல அளவிலான தூய்மை பணியாளர்களின் தலைமை அலுவலரும் இருந்து கோலங்களை தேர்வு செய்து முதல் பரிசு,இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, 4 ஆம் பரிசு என பரிசுகளும், ஆறுதல் பரிசாகவும் தேர்வு பெற்றுள்ள கோலங்களை தேர்வு செய்தனர்.

அந்த வகையில் சிறந்த கோலங்களாக தேர்வு செய்யப்பட்ட முதல் பரிசு பெற்ற கோலத்தை வரைந்த பெண்மணிக்கு இரண்டு கிராம் தங்க நாணயம், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம் எல்ஏ வழங்கினார்.

இரண்டாம் பரிசு பெற்ற மகளிருக்கு ஒரு கிராம் தங்க நாணயம், மூன்றாவது மற்றும் நான்காவது பரிசுகளை பெற்ற மகளிருக்கு தல 2000 ரூபாயும் ஆறுதல் பரிசாக 8 நபர்களுக்கு ரூபாய் 500 எனவும் போட்டியில் கலந்து கொண்ட அனைத்து தாய்மார்களுக்கும் சிறப்பு பரிசாக சில்வர் பேஷன் ஆகியவற்றையும் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்.

மேலும் பள்ளி குழந்தைகள் திராவிட மாடல அரசின் சாதனைகளை சிறப்பாக வரைந்ததற்காக அவர்களுக்கு பகுதி கழகத்தின் சார்பில் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் எலந்தனூர் சிவப்பிரகாஷ், மணலி புதுநகர் சி. எம். ராஜா, வழக்கறிஞர் எம். என்.தளபதி, சுகாசினி, சரண்யா, சிவப்பிரகாசம், நெடுஞ்செழியன், சரஸ்வதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

கோலப் போட்டியில் பொதுமக்கள் வரைந்த கோலத்தினை 19 வது வட்டம் மாத்தூருக்குட்பட்ட ஆயிரக்கணக்கான பொது மக்கள் கண்டு களித்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்





மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 300க்கும் மேற்பட்டவர்கள் பங்கு பெற்ற மாபெரும் கோலப் போட்டி, 19 வது வட்டம் மாத்தூர் முதல் பிரதான சாலை மற்றும் இரண்டாவது பிரதான சாலை இணைக்கும் சர்வ சக்தி மாரியம்மன் கோவில் தெருவில் வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் ஒன்றிய அரசின் வேதனைகள் குறித்து வரையப்பட்ட இக்கோலங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு, முதல் பரிசாக இரண்டு கிராம் தங்க நாணயம், இரண்டாம் பரிசாக ஒரு கிராம் தங்க நாணயம், மூன்றாம் மற்றும் நான்காம் பரிசாக ரூபாய் தலா 2000 மற்றும் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் ஆறுதல் பரிசாக சிறப்பு பரிசுகள் ஆகியவற்றை பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கினார். தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா. மதிவாணன், கவுன்சிலர் க. காசிநாதன், வி.கார்த்திகேயன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி. ஜெயராஜ், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் சின்னமாத்தூர் மணிகண்டன், கே. சேரலாதன்,துரை தசரதன், பி.துரைசாமி, துளசி, வக்கீல் திருமலை, சி.குகன், ஜி.ராஜேஷ் கண்ணன், முகமது முஸ்தபா, எலந்தனூர் சிவப்பிரகாஷ், மணலி புதுநகர் சி. எம். ராஜா, வழக்கறிஞர் எம். என். தளபதி, சுகாசினி, சரண்யா, சரஸ்வதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.